ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/56 - 2019 ඔක්තෝබර් මස 30 වැනි බදාදා - 2019.10.30

*2147/56 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு காலி மாநகர சபை கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் இலக்கம் 36 கழிவு நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2019, ஒற்றோபர் 24.*
*5/2/2/1518.*

**அட்டவணை**

காலி மாவட்டத்தில், காலி - கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 101, மாஇடிபே கிராம அலுவலர் பிரிவில் மாஇடிபே கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹலியத்த என்றழைக்கப்படுகின்ற 20 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : குணரத்ன மாவத்தை ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் பொம்பே காசல் கால்வாய்.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

திரு. லலித் அபேசேகர,
லபுதுவ வீதி,
லபுதுவ - காலி.

*11-1044*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு காலி மாநகர சபை கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் இலக்கம் 230 கழிவு நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 24.
5/2/2/1519.

**அட்டவணை**

காலி மாவட்டத்தில், காலி - கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 99B, பெட்டிகலவத்த கிராம அலுவலர் பிரிவில் பெட்டிகலவத்த கிராமத்தில் அமைந்துள்ள மொரவக் கோரளே போக்குவரத்து சேவை நிறுவனத்திற்குச் சொந்தமான காணியிலிருந்து 05 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : மோடி வாய்க்கால் வீதி ;
கிழக்கு : என்சல் பொருட் களஞ்சிய வளாகம் ;
தெற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் மோடி வாய்க்கால் வீதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

திரு. எம். கே. டீ. எஸ். நிறுவனம்,
பெட்டிகலவத்த,
காலி.

*11-1045*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு காலி மாநகர சபை கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் இலக்கம் 77 கழிவு நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,*
*இலக்கம் 35, “லக்திய மெதுர”,*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, ஒற்றோபர் 24.*
*5/2/2/1520.*

**அட்டவணை**

*காலி மாவட்டத்தில், காலி - கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 96-I, ஒசனகொட கிராம அலுவலர் பிரிவில் ஒசனகொட கிராமத்தில் அமைந்துள்ள 10 பேர்ச்சுக்கள் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*கிழக்கு : இலக்கம் 45/1 ஆம் இலக்க வீட்டுக் காணி ;*
*தெற்கு : உப வீதி ;*
*மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : கண்டறியமுடியவில்லை.*

*11-1046*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.